# <u>கரோல் பாடல் போட்டி - 2026</u>

## <u>கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நாடளாவிய ரீதியிலான கரோல் பாடல் போட்டி</u>

பெருமைமிகு நத்தார் பெருவிழாவை முன்னிட்டு, இந்த ஆண்டும் நாடளாவிய ரீதியில், நத்தார் கரோல் பாடல் போட்டியை நடத்துவதற்கு கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

**போட்டி நிபந்தனைகள்**

- **மொழி மற்றும் நேரம்:** தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலங்களில் போட்டி நடத்தப்படும் என்பதோடு, இது ஒரு குழுப் பாடலாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். கால அளவு அதிகபட்சம் 03 நிமிடங்கள் ஆகும்.
- **பங்கேற்பு:** கத்தோலிக்கர், கத்தோலிக்கர் அல்லாத எந்தவொரு நபரும் போட்டியில் கலந்துகொள்ளலாம்.
- **குழு உறுப்பினர்கள்:** பங்கேற்கக்கூடிய அதிகபட்சக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 பேர் மற்றும் குறைந்தபட்சம் 10 பேர் ஆவர். (பாடல், வாத்திய இசை, பாடல் வரிகள் மற்றும் இசை அமைப்பு உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களும் அடங்கலாக).
- **புதிய படைப்பு:** போட்டிக்காக நீங்கள் புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு பாடலைச் சமர்ப்பிக்க வேண்டும். அது வேறு எந்தப் போட்டியிலும் வெற்றிபெறாததுடன், இதற்கு முன்னர் எந்தவொரு ஊடகத்திலும் ஒளிபரப்பப்பட்டிருக்கக் கூடாது (***முற்றிலும் புதிய படைப்பாக இருக்க வேண்டும்***). மேலதிகமாக, திணைக்களத்தினால் வழங்கப்படும் பொதுவான இரண்டு பாடல்களில் ஒன்றையும் பாடுதல் வேண்டும்.
- **ஒப்புதல்:** உங்கள் குழுவினால் சமர்ப்பிக்கப்படும் புதிய படைப்புக்கான பாடல் வரிகள் மற்றும் இசை அமைப்பை வழங்கியவர்களின் ஒப்புதலை விண்ணப்பத்தில் குறிப்பிட்டு, சான்றுபடுத்தி அனுப்பப்படல் வேண்டும்.
- **பாடலின் பண்புகள்:** நீங்கள் உருவாக்கிய பாடலில் பின்வரும் பண்புகள் இருக்க வேண்டும்:
  - அர்த்தமுள்ள வரிகள் மற்றும் இசை அமைப்பு உயர் தரமானதாக இருக்க வேண்டும்.
  - அர்த்தமுள்ள ஒரு செய்தியைக் கொண்டிருக்க வேண்டும்.

- **விண்ணப்ப விபரங்கள்:**
  - திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் போது, குழுவின் பெயர், முகவரி, எளிதில் தொடர்புகொள்ளக் கூடிய இரண்டு தொலைபேசி எண்களைக் குறிப்பிடுவது கட்டாயமாகும். மேலதிகமாக வாட்ஸ்அப் (WhatsApp) எண் ஒன்றும் குறிப்பிடப்பட வேண்டும்.
  - விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பின்னர், போட்டிகள் நடைபெறும் பிரதேசம் திணைக்களத்தினால் தீர்மானிக்கப்படும். அதற்கமைய, உங்கள் பிரதேசத்திற்கு அருகில் உள்ள போட்டி நடைபெறும் இடம் உங்களுக்குத் திணைக்களத்தினால் அறிவிக்கப்படும்.
  - நவம்பர் மாத ஆரம்பத்தில் இருந்து வார இறுதி நாட்களில் மற்றும் அரச விடுமுறை நாட்களில் போட்டி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.
  - தேவையான வாத்தியக் கருவிகளை நீங்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும் (முதன்மையாக ஓகன் /Keyboards, கித்தார் அல்லது வயலின் மற்றும் தேவைப்பட்டால் தாள வாத்தியங்களைப் பயன்படுத்தலாம்).
  - உங்கள் விண்ணப்பத்தை மதிப்பிற்குரிய பங்குத்தந்தை / அதிபர் / நிறுவனத் தலைவரின் சிபாரிசுடன் 2026.10.20ம் திகதிக்கு முன்னர் எமது திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கவும்.
  - வெற்றிபெறும் படைப்புகளுக்கு வெற்றிச்சின்னங்கள், பணப்பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**பொதுவான (பரிந்துரை செய்யப்பட்ட) பாடல்கள்**

**‘பிறந்தார் பிறந்தார் கிறிஸ்து பிறந்தார்’** https://youtu.be/KjKrchZDXms?si=IudtslGK7hY14s2c

**‘ஈராயிரம் ஆண்டுகள் முன்”** https://youtu.be/d9UdwJ7FCAs?si=MEuRJs_A7inkCQ-p

மேலதிக விபரங்களுக்கு: 0112665584

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி

**இயக்குநர்,**
**கிறிஸ்தவ மத விவகார திணைக்களம்,**
**3 ஆம் மாடி,**
**இல. 180, டி. பி. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு 10.**

கொட்டும் பனியில் குளிர்நிலா
மண்ணில் வந்த பாலகனே
உனை தொட்டு தழுவி அணைக்க
எந்தன் உள்ளம் ஏங்கிடுதே -2
அன்னை மடி மீது நீயும் தவழ
கண்டு காண மேய்ப்பர்கள் வந்தனர்
மாட்டுத் தொழுவமாய் எந்தன்
உள்ளம் மாறிட மீட்பர் பிறந்துள்ளார்

எந்தன் நண்பனாய் அன்பனாய்
நீயும் மாறிட
எந்தன் உயிருள்ள நாளெல்லாம்
உம்மை போற்றுவேன் - 2

வானின் நீளம் ஓடும் நீரும்
உம் அன்பை அறிந்ததே
பாவியான எந்தன் உள்ளம்
உம்மை மறந்ததே
சாதி மதம் தேடல் இங்கே
அன்பை அழித்ததே
உண்மையான அன்பிற்காக
எங்கியே நின்றதே
ஒரு தாயை தேடும் பிள்ளை போல
அன்பை தேடி நின்றேன்
இந்த தேடல் எல்லை செல்லும் முன்னே
உம்மை கண்டுக்கொண்டேன்
இருள் யாவும் மறைந்திடும்
ஒளி எங்கும் பரவிடும்
இதை யாவரும் காணவே
உம் வருகை உணர்த்திடும்

என்னை வீழ்த்திட தாழ்த்திட
யார் யார் நினைப்பினும்
உந்தன் பார்வையில் பாதையில்
என் தேடல் வேண்டுமே - 2

தாவீதின் ஊரிலே ஒரு ராஜகுமாரன்.
என்னை ஆள வந்தவர் என் நேசகுமாரன்.

சாரோனின் ரோஜா அவர் லீலி புஷ்பமே.
அவர் அழகை சொல்லிப் புகழ ஒரு வார்த்தை போதாது.

தேவ பாலன் நம்மையே மீட்க வந்தாரே
பாவம் சாபம் அதை பாேக்க வந்தாரே

ராஜாதி ராஜனவர் துதிக்கு பாத்திரர்..
துதி செய்து நம் தேவனை ஆராதனை செய்வோம்

ஓ மரியா ஓ மரியா ஓ மரியா ஓ மரியா
ஓ மரியா அறிவாயோ உனதுபாலகன்
உன்னையும் புதிதாக்குவார்
நீ பெற்ற குழந்தை அதே,
உன் விடுதலை பெற்றே தரும்

ஓ மரியா அறிவா மோ உன் பாலகன்
ஓர் நாள் நீர்மேல் நடப்பார்.
ஓ மரியா அறிவாயோ உன் பாலகன்
எம் மகன்களை மகள்களை மீட்பார்
அறிவாயோ உனதுபாலகன்
உன்னையும் புதிதாக்குவார்
நீ பெற்ற குழந்தை அதே,
உன் விடுதலை பெற்றே தரும்

ஓ மரியா அறிவாயோ உன் பாலகன்
குருடர் கண்கள் திறப்பார்
ஓ மரியா அறிவாயோ உன் பாலகன்
ஓர் கையால் புயல் ஓயச்செய்வார்

அறிவாயோ, உனது பாலகன்
தாதர்கள் வழி சென்றவர்
நீ முத்தம் தரும் போதெல்லாம்,
இறை முகத்தில் முத்தம் தந்தாய்

குருடரும் செலிடரும் குணமாவர்
மரித்தோர் எழும்புவர்
முடவர் நடப்பர், ஊமை பேசுவர்
தேவ ஆட்டுக்குட்டிக்கு நன்றி.....

ஓ மரியா அறிவாயோ உனதுபாலகன்
உன்னையும் புதிதாக்குவார்
நீ பெற்ற குழந்தை அதே,
உன் விடுதலை பெற்றே தரும்

ஓ மரியா ஓ மரியா ஓ மரியா ஓ மரியா

என் ஜீவனே என் இயேசு பாலனே
ஏழைக் கோலம் பூண்ட தேவனே
என் ராஜனே என் வானதூதனே
இம்மண்ணில் வந்த ராஜ ராஜனே

மந்தையோடும் கந்தையோடும் வந்த தேவனே
எந்தன் பாவ நிந்தைப் போக்க வந்த தேவனே
விந்தையாக இம்மண்ணில் வந்தாய்
அந்தமும் ஆதியும் இயேசுவே

விண்ணும் மண்ணும் சொந்தமான எந்தன் தேவனே
விண்ணிலிருந்து மண்ணில் வந்த எந்தன் தேவனே
இன்பமாக எம் நெஞ்சில் வந்தாய்
அன்பனும் நண்பனும் இயேசுவே

என்ன தருவேன் நான் உனக்கு
சின்னக் குழந்தை என் இயேசுவே (2)
அன்னைமரியின் பாலகனே – இந்த
அகிலம் போற்றும் நாயகனே (2)

உள்ளமென்னும் கோயிலை உனக்குக் கொடுப்பேன்
உயிரோடு வாழும் வரை
உடல் பொருள் ஆவியெல்லாம் நீதானே எந்நாளும் ஏது குறை (2)
தத்தித்தவழும் தங்க ரதமே
முத்தம் தந்திட நித்தம் வருவேன் – ஆரி ராரிராரி ராரோ -2

மனிதம் புனிதம் அடைவதற்கு மழலை வடிவில் நீ பிறந்தாய்
இருளில் வாழும் என்னையும் நீ ஏற்று
உலகின் ஒளியாய் பிறந்தாய் (2) – தத்தித்தவழும்...
மண்ணுலகில் என்னை காத்திடுவீர்
மாட்டுத் தொழுவில் நீ பிறந்தாய்
வளர்ந்து நானும் வாழ்ந்திடுவேன் நானும் உந்தன் தயவால் (2)

ஜில்லென குளிரும் காலம் *Christmas* காலம் தான்
புல்லணை எங்கும் ஈரம் *Christmas* நேரம் தான் (2)
விண்வெளி எங்கும் ராகம் தூதர் பாடல் தான்
கண்மணி பாலன் இயேசு தூங்கும் நேரம் தான்

ஓ ராரி ராரி ரோ -2
ஓ ராரி ஓ ராரி

பட்டாம்பூச்சி போல நெஞ்சில் சந்தோஷம்
புல்லாங்குழல் போல மண்ணில் சங்கீதம் (2)
வானம் பொழிகிறதோ பூமி நனைகிறதோ
விண்மீன் ஜொலிக்கிறதோ பாதை தெரிகிறதோ (2)
குளிர் காலம் பனி தூவும் வெள்ளைக்கோலம் தான்
புது விண்மீன் ஒளி தூவும் *Christmas* நேரம் தான்
ஓ ராரி ராரி ரோ

மண்ணில் சமாதானம் எங்கும் ஆனந்தம்
மன்னவர் வந்தார் என்று மீட்பின் ஆரம்பம் (2)
முன்னே இருந்தவரோ மீண்டும் வருபவரோ
என்றும் இருப்பவரோ எங்கும் நிறைந்தவரோ (2)
இவர் தானே என் தேவன் நான் எங்கும் சொல்லுவேன்
இவர் தானே என் மீட்பர் நான் என்றும் வெல்லுவேன்
ஓ ராரி ராரி ரோ

பனிபொழிகிறது மெய்சிலிர்க்கிறது
நெஞ்சில் ஆனந்த மத்தாப்பு தெளிக்கிறது
சிலிர்க்கும் மார்கழி பூபாளம் பாடுது
Christmas வரவை சொல்லாமல் சொல்கிறது
கிறிஸ்து ஜனனம் சொன்னாலும் இனிக்கிறது
தாதருக்கிணையாய் பாடுங்கள்
சுந்தர தமிழால் போற்றுங்கள் - 2
இறையாட்சி விதிப்பதை கூறுங்கள்
ஆடுங்கள் பாடுங்கள் அவனியோர் அறிந்திட
அர்த்தமுடன் இதை மகிழ்ந்தே கொண்டாடுங்கள்
(அல்லோயா -3)

இயேசு கிறிஸ்து பிறந்தார்
இதயங்கள் ஒளிபெற செய்தார் -2
சொர்க்கத்தின் வாசலை திறந்தார்
சௌபாக்கிய வாழ்விற்கு வழிவகுத்தார்

ஆடு மேய்க்கும் மேய்ப்பர் தேடியே வந்தார் விண்ணகத்து தூதர் பாடியே வந்தார் (2)
கீதம் ஓரழகோ பெத்லேம் ஊரழகோ பாலன் பேரழகோ நாமம் தானழகோ (2)
இவர் தானே என் தேவன் நான் எங்கும் சொல்லுவேன் இவர் தானே என் ஜீவன் இவர் பின்னே செல்லுவேன் – ஜில்லென

**Department of Christian Religious Affairs**
**Carol Competition – 2026**

Application No [ ]

**District:**
**Name of the Parish / School / Institution:**
**Address of the Parish /School / Institution:**

| **Team Name** | | | | |
|---|---|---|---|---|
| **No** | **Name : Singers** | **Phone No** | **Whatsapp No** | **Signature** |
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |
| 5 | | | | |
| 6 | | | | |
| 7 | | | | |
| 8 | | | | |
| 9 | | | | |
| 10 | | | | |
| 11 | | | | |
| 12 | | | | |
| | **Name : Music Players** | | | |
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| | **Name : Lyricist** | | | |
| 1 | | | | |
| | **Name : Notation** | | | |
| 1 | | | | |

**Declaration of Original Creation**

We, the undersigned, hereby confirm and certify that the presented creation is our original work. We further confirm that the lyrics and musical composition are submitted with our full knowledge, consent, and approval as the respective creators.

……………………………….
**Lyricist**

…………………………………..
**Music Composer**

We hereby confirm that we have read, understood, and agree to comply with the terms and conditions of this competition as published on the Department of Christian Religious Affairs website (christian.gov.lk).

……………………………….
**Team Leader**

…………………………………………
**Parish priest/Principal/Head of the Institution**
**Official Seal**